*

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கை மகாவலி அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் - 2012,— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் 2016.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை மகாவலி அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கை மகாவலி அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் - 2013,— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் 2016.11.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை மகாவலி அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் - 2013,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(வலுவாதார அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்,— ஸ்ரீலங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிடெட்டின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் - 2012/2013,— 1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிடெட் சட்டத்தின் கீழ் 2016.07.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, சுயாதீன கணக்காய்வாளர்களின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஸ்ரீலங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிடெட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2016.10.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

2127/ '17

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வன விலங்குகளின் செயற்பாடுகள் காரணமாக கமக்காரர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) மொத்த விவசாய உற்பத்திகளில் வனவிலங்குகளினால் அழிவடைகின்ற அளவு யாது என்பதையும்;

(iii) கமக்காரர்களை பாதுகாப்பதற்காக மற்றும் வன விலங்குகளைப் பேணுவதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) செங்குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையின் காரணமாக பறவை முட்டைகள் மற்றும் குஞ்சுகள் அழிவடைகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(v) அதற்காக வழங்கப்படுகின்ற தீர்வுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2195 / ' 17

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருந்த தேயிலைத் தோட்டங்கள் நீண்டகால குத்தகை அடிப்படையில் தனியார் கம்பனிகளுக்கு குறைந்த பணத் தொகைக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி தோட்டங்கள் குத்தகைக்கு விடப்படுகின்றபோது அரசாங்கத்தினால் அறவிடப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அதற்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கம்பனிகள் குத்தகைத் தொகையைச் செலுத்தாது, நிபந்தனைகளை மீறி, தோட்டங்களை பராமரிக்காது அழிவடையச் செய்து வருகின்றதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

(v) அரசாங்கத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் மீறப்பட்டு வருகின்றமையால், இத் தோட்டங்களை செழிப்படையச் செய்து நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கச் செய்ய அமைச்சு நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

